**திருநெல்வேலி மாநகராட்சி**

**2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட டவுண் நேதாஜி போஸ் மார்க்கெட் கடந்த 24.03.2020-ம் தேதி முதல் கொரோனா தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு பூட்டப்பட்டு இயங்காமல் உள்ளது. சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கண்ட நேதாஜி போஸ் மாாக்கெட் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு கடந்த 16.06.2020-ம் தேதி முதல் போஸ் மார்க்கெட்டில் இயங்கி வந்த கடைகளின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு ஒவ்வொரு கடைகளும் இடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட மார்க்கெட்டில் இயங்கி வந்த கடைகளுக்கு மாற்று இடமாக தற்காலிகமாக டவுண் பொருட்காட்சி திடலில் 86 கடைகளும், டவுண் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான மைதானதில் 25 தற்காலிக தரைத்தள கடைகளும் அமைக்கப்பட்டு இ யங்கி வருகின்றது.

இந்நிலையில் அரசாணை நிலை எண் 298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கலாம் துறை, நாள் 02.09.2020-ன்படி கொரோனா நோய் தொற்று நோய் தடுப்பு பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத மற்றும் வரியில்லா இனங்களுககு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்திரவிடப்ட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையின்படியும், தற்போது மேற்படி இடத்தில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள இருப்பதால், இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் காணும் கேட்புகளை கணிணியிலிருந்து 01.04.2020ம் தேதி முதல் நீக்கம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேலே பொருளில் கண்டவாறு திருநெல்வேலி டவுண் நேதாஜி போஸ் மார்க்கெட்டில் இயங்கி வந்த கடைகள் இடிக்கப்பட்டுள்ளதால், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காணும் 349 கடைகளின் கேட்புகளை கணினியில் இருந்து 01.04.2020ம் தேதி முதல் புனரமைப்பு பணிகள் முடிவடைந்து ஏலம் விடப்படும் வரை நீக்கம் செய்வது குறித்து மாமன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 155:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் 125/2020/அ1-திலி)

---

2) திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1632 எண்ணம் அடிபம்புகள் மற்றும் 274 எண்ணம் விசைபம்புகளை பராமரிக்கும் பணியானது தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண்.101 நாள் 12.10.2018-ன்படி இரண்டு வருடங்களுக்கு அடிபம்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு திரு.செல்வம் என்பவருக்கு 23.11.2018 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டு அன்னாரால் அடிபம்புகள் மற்றும் விசைபம்புகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், திரு.செல்வம் ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஆண்டு கால ஒப்பந்தம் எதிர்வரும் 22.11.2020 -ல் முடிவடைகின்றது.

இந்நிலையில் தொடர்ந்து 23.11.2020 முதல் மேலும் ஒரு வருட காலத்திற்கு இப்பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தை தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது. அதன்படி அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை ஓராண்டுக்கு பராமரிக்க ஏற்படும் மதிப்பீடு நடப்பு ஆண்டு செலவினத்தின் அடிப்படையில் வருடத்திற்கு ரூ.48.00 இலட்சம் ஆகின்றது.

எனவே, மாநகராட்சி பகுதிகளில் உள்ள அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிக்கும் பணியினை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வது தொடர்பாக

ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மூலம் புதிய நிறுவனத்தை தேர்ந்தெடுக்கவும் அதற்காகும் ஒரு வருட காலத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.48.00 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, மாநகராட்சி பகுதிகளில் உள்ள அடிபம்புகள் மற்றும் விசைபம்புகளை பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த காலம் 22.11.2020ல் முடிவடைய இருப்பதால் மேற்படி பராமரிப்பு பணிகளை தொடர்ந்து 23.11.2020 முதல் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.48.00 இலட்சத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மூலம் புதிய நிறுவனத்தை தேர்ந்தெடுக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 156:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 22/2020-21-மை.அ)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்தில் உள்ள வார்டு எண் 20, வடக்கு ஹைகிரவுண்டு ரோட்டில் அமைந்துள்ள ஏ.யு.பி.இ.டி.சின்மயா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு 2010-2011ம் ஆண்டு முதல் வரிவிதிப்பு எண் 146/020/03071-க்கு அரையாண்டு வரியாக ரூ.3,00,674/- வணிகப்ப பயன்பாட்டில் நிர்ணயம் செய்யப்பட்டு நாளது தேதி வரை ரூ.66,14,828/- (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சத்து பதினான்காயிரத்து எண்ணூற்று இருபத்து எட்டு மட்டும்) நிலுவையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை எண்7234/2014/ஆர்1, நாள் 25.05.2018 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் வெளியிடு எண் 33/2018-இன்படி பள்ளிக்கட்டிடங்களுக்கு 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் புதியதாக சொத்துவரி விதிக்க தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பள்ளிக்கு தற்போது அளவீடு செய்து 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரிவிதிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பள்ளிக்கு 2010-2011ஆம் ஆண்டு முதல் 2020-2021ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூ.66,14,828/- (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சத்து பதினான்காயிரத்து எண்ணூற்று இருபத்து எட்டு மட்டும்) இரத்து செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்படி தொகையினை இரத்து செய்வது குறித்து மாமன்றத்திற்கு இப்பொருட்சீட்டு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை எண் 7234/2014/ஆர்1, நாள் 25.05.2018 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண் 33/2018-இன்படி பள்ளிக்கட்டிடத்திற்கு 2017-2018 இரண்டாம் அரையாண்டு முதல் புதியதாக சொத்துவரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் அப்பள்ளிக்கு 2010-2011ஆம் ஆண்டு முதல் வணிக பயன்பாட்டில் விதிக்கப்பட்ட சொத்துவரிவிதிப்பு எண் 146/020/03071-ஐ 01.04.2010 முதல் இரத்து செய்து அதற்கான நிலுவை கேட்புத் தொகை ரூ.66,14,828/-ஐ (ரூபாய் அறுபத்து ஆறு இலட்சத்து பதினான்காயிரத்து எண்ணூற்று இருபத்து எட்டு மட்டும்) வசூல் செய்ய மார்க்கமில்லாத காரணத்தினால் மேற்படி தொகையினை வஜா செய்ய மாமன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 157:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் அ4/6348/2019-பாளை)

---

4) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி, டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை சீர்மிகு சாலைகளாக (Development of Smart street -1) மேம்படுத்துதல். (1.)மேல மாட வீதி (2)தெற்கு மாட வீதி

(3)அண்ணா தெரு (4) சத்திய மூர்த்தி தெரு (5)சத்தியமூர்த்தி குறுக்குத் தெரு (6)தெப்பக்குளம் கீழத் தெரு (7)அம்மன் சன்னதி தெரு பணியினை ரூ.9.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14.12.2018 அன்று நடைபெற்ற 6வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.16-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-2 நாள் 06.08.2019-ல் ரூ.9.40 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25477/2017/DO1 நாள் 24.10.2019-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, 16.12.2019, 12.02.2020, 23.03.2020, 13.04.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் ஐந்து தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் ஆறாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் (2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 27.08.2020 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் 1) மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் 2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணைகளை 31.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சி, டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை சீர்மிகு சாலைகளாக (Development of Smart street - 1) மேம்படுத்துதல். (1.)மேல மாட வீதி (2)தெற்கு மாட வீதி (3)அண்ணா தெரு (4) சத்திய மூர்த்தி தெரு (5)சத்தியமூர்த்தி குறுக்குத் தெரு (6)தெப்பக்குளம் கீழத் தெரு (7)அம்மன் சன்னதி தெரு | ரூ.8,00,94,680/- | ரூ.9,29,31,252/- | ரூ.9,45,09,787/- |
| | | | 16.03% மதிப்பீட்டை விட அதிகம் | 18.00% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 9,29,31,252/- ஆனது மதிப்பீட்டை விட 16.03% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் 16.03% -ல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 10.29% (ஒப்பந்த மதிப்பு ரூ.8,83,37,378/-) கூடுதலான விலை விகிதத்தில்

மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரருக்கு 02.09.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 04.09.2020ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே விலைக்குறைப்பு செய்யப்பட்ட 10.29% கூடுதல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 9.85% (ரூ.8,79,82,973/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்தும், மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20 -ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.8,79,82,973/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.85% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி இரண்டாவது விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.8,79,82,973/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.115 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.25477/2020/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.84% கூடுதலாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப்பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகளை முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி, டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை சீர்மிகு சாலைகளாக (Development of Smart street -1) மேம்படுத்துதல் (1.)மேல மாட வீதி (2)தெற்கு மாட வீதி (3)அண்ணா தெரு (4) சத்திய மூர்த்தி தெரு (5)சத்தியமூர்த்தி குறுக்குத் தெரு (6)தெப்பக்குளம் கீழத் தெரு (7)அம்மன் சன்னதி தெரு) பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.8,79,82,973/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.85% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) -ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.115 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர்

அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.்.25477/2020/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.84% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.8,79,82,973/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.85% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.84% அதிகமாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப்பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 158:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண்.2/2020-21/SCM)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி, டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை சீர்மிகு சாலைகளாக (Development of Smart street-2) மேம்படுத்துதல் (1)கட்டளை கருவேலன் குண்டு தெரு (2)வையாபுரிநகர் மேற்கு, வடக்கு மற்றும் கீழத் தெரு, (3)வையாபுரிநகர் தெற்கு தெரு (4)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-1 (5)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-2 (6)சேரன்மகாதேவி ரோடு, திலி டவுண் (7)பெருமாள் கோவில் தெற்கு தெரு (8)பெருமாள் கோவில் தெற்கு மாட வீதி (9)பெருமாள் கோவில் சன்னதி தெரு பணியினை ரூ.12.34 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14.12.2018 அன்று நடைபெற்ற 6வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.17-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-2 நாள் 06.08.2019-ல் ரூ.12.34 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.25477/2017/DO1 நாள் 24.10.2019-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, 16.12.2019, 12.02.2020, 23.03.2020, 13.04.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் ஐந்து தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் ஆறாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி

தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் (2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 27.08.2020 -ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் மெசர்ஸ். 1) KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் 2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணைகளை 31.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை சீர்மிகு சாலைகளாக (Development of Smart street-2) மேம்படுத்துதல் (1)கட்டளை கருவேலன் குண்டு தெரு (2)வையாபுரிநகர் மேற்கு, வடக்கு மற்றும் கீழத் தெரு, (3)வையாபுரிநகர் தெற்கு தெரு (4)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-1 (5)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-2 (6)சேரன்மகாதேவி ரோடு, திலி டவுண் (7)பெருமாள் கோவில் தெற்கு தெரு (8)பெருமாள் கோவில் தெற்கு மாட வீதி (9)பெருமாள் கோவில் சன்னதி தெரு | ரூ.10,57,06,380/- | ரூ.12,26,49,410/- | ரூ.12,47,17,915/- |
| | | | 16.03% மதிப்பீட்டை விட அதிகம் | 17.99% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 16.03% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் 16.03% -ல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 10.29% (ஒப்பந்த மதிப்பு ரூ.11,65,85,985/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை

செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரருக்கு 02.09.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 04.09.2020ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே விலைக்குறைப்பு செய்யப்பட்ட 10.29% கூடுதல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 9.85% (ரூ.11,61,19,361/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்தும், மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20 -ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் வரும் மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.11,61,19,361/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.85% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.11,61,19,361/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.117 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.25430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.88% கூடுதலாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப்பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளின்படி மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி, டவுண் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட தெருக்களை பொலிவுறு தெருக்களாக (Development of Smart street-2) மேம்படுத்துதல் (1)கட்டளை கருவேலன் குண்டு தெரு (2)வையாபுரிநகர் மேற்கு, வடக்கு மற்றும் கீழத் தெரு, (3) வையாபுரிநகர் தெற்கு தெரு (4)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-1 (5)வையாபுரிநகர் இணைப்புத் தெரு-2 (6)சேரன்மகாதேவி ரோடு, திலி டவுண் (7)பெருமாள் கோவில் தெற்கு தெரு (8)பெருமாள் கோவில் தெற்கு மாட வீதி (9)பெருமாள் கோவில் சன்னதி தெரு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.11,61,19,361/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.85% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) -ஐ சென்னை

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.116 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.25477/2020/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.88% கூடுதலாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப்பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகளை முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளின்படி, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 159:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண்.2/2020-21/SCM)

---

6) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் செய்தல் பகுதி-2 (சிப்பம்-4) 1)பாட்டபத்து மெயின் ரோடு 2)தென்பத்து சாலை தெரு3)மகிழ்வண்ணநாதபுரம் தெரு 4)வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெரு 5)செண்பகம்பிள்ளை தெரு 6)கல்லணை தெரு 7)வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் குறுக்குத் தெரு பணியினை ரூ.10.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14.12.2018 அன்று நடைபெற்ற 8வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.9-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 14595/2018/IHSDP-3-1 நாள் 09.01.2020-ல் ரூ.10.40 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28430/2019/DO2 நாள் 29.01.2020-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, 13.04.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் இரண்டு தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் மூன்றாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCMன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடிமுத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் (2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 31.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் செய்தல் பகுதி-2 (சிப்பம்-4) | ரூ.9,84,07,117/- | ரூ.11,38,18,914/- |
| | | | 15.66% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 15.66% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் 15.66% -ல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 8.89% (ஒப்பந்த மதிப்பு ரூ.10,71,55,085/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரருக்கு 02.09.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 04.09.2020ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே விலைக்குறைப்பு செய்யப்பட்ட 8.89% கூடுதல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 8.41% (ரூ.10,66,81,645/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்தும், மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20-ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் வரும் மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,66,81,645/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.10,66,81,645/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.117 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த

மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.88% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.10,66,81,645/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.88% அதிகமாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப் பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் பகுதி-2 (சிப்பம்-4) 1)பாட்டபத்து மெயின் ரோடு 2)தென்பத்து சாலை தெரு3)மகிழ்வண்ணநாதபுரம் தெரு 4)வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெரு 5)செண்பகம்பிள்ளை தெரு 6)கல்லணை தெரு 7)வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் குறுக்குத் தெரு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10,66,81,645/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) -ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.117 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.88% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.10,66,81,645/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.88% அதிகமாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப் பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 160:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 2/2020-21/SCM)

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் செய்தல் பகுதி-2 (சிப்பம்-5) 1) மணிபுரம் தெரு 2) ஏ.பி.மாடத் தெரு 3) வயல் தெரு 4) வீரகேரள பண்டிதர் தெரு மற்றும் 5) வடம்போக்கி தெரு பணியினை ரூ.5.96 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 14.12.2018 அன்று நடைபெற்ற 8வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.10-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 14595/2018/IHSDP-3-2 நாள் 09.01.2020-ல் ரூ.5.96 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 28430/2019/DO2 நாள் 29.01.2020-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணியினை மேற்கொள்வதற்கு, 13.04.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் இரண்டு தேதிகளிலும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் மூன்றாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCM-ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ். KPM கன்ஸ்ட்ரக்சன் & கோ, திருப்பூர் மற்றும் (2) மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்ட்ரக்சன், ஈரோடு ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மெசர்ஸ்.எமரால்ட் கன்ஸ்டரக்சன், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்பநதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 28.08.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 31.08.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு :-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் செய்தல் பகுதி-2 (சிப்பம்-5) | ரூ.5,55,51,807/- | ரூ.6,42,48,965/- |
| | | | 15.66% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். KPM கன்ஸ்ட்ரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 15.66% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் 15.66% -ல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 8.99% (ஒப்பந்த மதிப்பு ரூ.6,05,47,986/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல என கருதி மீண்டும் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரருக்கு 02.09.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் தனது 04.09.2020ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே விலைக்குறைப்பு செய்யப்பட்ட 8.99% கூடுதல் விலை விகிதத்தில் இருந்து குறைத்து 8.41% (ரூ.6,02,21,683/-) கூடுதலான விலை விகிதத்தில் மேற்படி திட்டப்பணியினை செய்ய சம்மதம் தெரிவித்தும், மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2019-20-ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் வரும் மெசர்ஸ். KPM கன்ஸ்டரக்சன் & கோ, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.6,02,21,683/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி விலைக்குறைப்பிற்கு பின்வரும் ரூ.6,02,21,683/- ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.118 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.80% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.6,02,21,683/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை

விட 8.41% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.80% அதிகமாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப் பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் திட்டப்பணிகள் போன்ற பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாநகர பகுதிகளில் உள்ள சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்தும் பணிகள் பகுதி-2 (சிப்பம்-5) 1)மணிபுரம் தெரு 2).ஏ.பி.மாடத் தெரு 3)வயல் தெரு 4)வீரகேரள பண்டிதர் தெரு மற்றும் 5)வடம்போக்கி தெரு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.6,02,21,683/- என்பது 2019-20-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தொடர்பாக, 2020-21ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data -2020-21) -ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.118 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data விற்கு ஒப்புதல் வழங்கியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு 1 அத்தியாயம் 10 உட்பிரிவு 10.1.5 படி நடப்பு நிதியாண்டிற்கான விலைவிகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரரால் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், மதிப்பீட்டை விட 4.80% கூடுதலாக உள்ளது. மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், திட்டப்பணியினை குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டிய அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1 அத்தியாயம்-2, உட்பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு ரூ.6,02,21,683/- என்பது 2019-20ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 8.41% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 4.80% அதிகமாக உள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட சாலைகளில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பகுதி-2 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அப் பகுதியில் கேபிள்கள் மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் தற்போது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் துவங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுமையாக முடிப்பதற்கே காலதாமதம் ஏற்படும் என்பதால், மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னரே சீர்மிகு சாலைகள் அமைக்க இயலும்.

எனவே, காலதாமதத்தினை கருத்தில் கொண்டும், சீர்மிகு நகரத் திட்டப்பணியினை உரிய காலகெடுவிற்குள் முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி 23.10.2020 -ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட பரிந்துரைகளின்படி, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கப்பட இருக்கும் திட்டப்பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு பதிலாக மாற்றுப்பணியினை புதிதாக தேர்வு செய்து உரிய ஒப்புதல் பெற்று செயல்படுத்திட மாமன்ற அனுமதிக்கு.

தீர்மானம் எண் 161:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 2/2020-21/SCM)

---

8) திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் ஒப்பந்த பணியாளர்களுக்கு தொழிலாளர் சேமநலநிதி நிலுவைத் தொகை ரூ.12,12,56,753/- செலுத்தாத காரணத்தினால் மாநகராட்சி வங்கி கணக்குகளை முடக்கம் செய்ய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர் அவர்களின் கடிதம் எண் TN/TNY/89230/EPF/Circle 2/ CD-1/T-15/2020 நாள் 28.09.2020ம் (வங்கி மேலாளர்களுக்கு முகவரியிட்டது) தேதிய கடிதத்தில் உத்திரவிடப்பட்டது. இதனை எதிர்த்து திருநெல்வேலி மாநகராட்சியால் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் WMP(MD)No.11878 & 11879/2020 in WP(MD) No.14219/2020 எண் கொண்ட வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கின் அவசர அவசியம் கருதி திரு.ஆதிமூலபாண்டியன் மாமன்ற வழக்கறிஞர் மற்றும் கூடுதலாக அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.செல்லப்பாண்டியன் அவர்களையும் மாநகராட்சி சார்பாக வழக்காட இவ்வலுவலக 07.10.2020ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி மேற்படி வழக்கில் 12.10.2020 அன்று மாண்புமிகு நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி இடைக்கால தடையாணை பெறப்பட்ட வகைக்கான வழக்கறிஞர் கட்டணம் திரு.செல்லப்பாண்டியன் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அவர்களுக்கு ரூ.50000/- மற்றும் திரு.ஆதிமூலபாண்டியன் மாமன்ற வழக்கறிஞருக்கு ரூ.30000/- ஆக மொத்தம் ரூ.80000/- ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கியதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

மேலே பொருளில் காணும் விபரப்படி இவ்வழக்கின் அவசர அவசியம் கருதி இடைக்கால தடையாணை பெறப்பட்ட வகைக்கான வழக்கறிஞர் கட்டணம் திரு.செல்லப்பாண்டியன் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அவர்களுக்கு ரூ.50000/- மற்றும் திரு.ஆதிமூலபாண்டியன் மாமன்ற வழக்கறிஞருக்கு ரூ.30000/- ஆக மொத்தம் ரூ.80000/- ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கியதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 162:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் சி3/5031/2012-மை.அ)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் அலுவலகம், வார்டு எண் 15, 22, 23, 24, 25 வார்டுகளில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டிடம் கட்டி அதற்கு புதிய வரிவிதிப்பு கொடுக்கப்பட்டுள்ளதால், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் காணும் பழைய வரிவிதிப்புகளை கணினியிலிருந்து இரத்து செய்யவும், கேட்புத் தொகையினை ரத்து செய்யும்படி வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதன்படி பட்டியலில் கண்டுள்ளவாறு அனைத்து வரிவிதிப்பினை இரத்து செய்யவும், வார்டு எண்கள் 15, 22, 23, 24, 25 ஆகிய வார்டுகளில் உள்ள மொத்த நிலுவைத் தொகை ரூ.1,28,980/- இரத்து செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு இப்பொருட்டுசீட்டு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் அலுவலக வருவாய் உதவியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் 29.09.2020 மற்றும் 05.10.2020ம் தேதிய குறிப்பின்படி வார்டு எண்கள் 15, 22, 23, 24, 25 வார்டுகளில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டிடம் கட்டி உள்ளதால் புதிய வரிவிதிப்பு செய்து, பழைய வரிவிதிப்பு எண்களை இரத்து செய்யாமல் உள்ளதை பட்டியலில் கண்டுள்ளவாறு அனைத்து வரிவிதிப்புகளை இரத்து செய்யவும், அவற்றிற்கான மொத்த நிலுவை கேட்புத் தொகை ரூ.1,28,980/-ஐ நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 163:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ8/3986/2020-பாளை)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் அலுவலகம் வார்டு எண் 23, கதவு எண் 19, பெருமாள் கீழரதவீதி முகவரியில் உள்ள வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு ஒன்று மட்டுமே உள்ளது எனவும், அதன் வரிவிதிப்பு எண் 146/230389 ஆகும். ஆனால் மேற்படி வீட்டிற்கு இரண்டு வரிவிதிப்புகள் உள்ளதாகவும், எனவே தவறான வரிவிதிப்பினை 146/230087 இரத்து செய்திட உதவி வருவாய் அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் அறிக்கை செய்துள்ளார். மேற்படி அறிக்கைகளின்படி 146/230389 மற்றும் 146/230087 என இரட்டை பதிவாக உள்ளது.

UGD 146/230389 என்ற இணைப்புகு 2020-2021ம் ஆண்டு வரை நிலுவை இல்லாமல் செலுத்தியுள்ளார். UGD-146/230087-ன் இணைப்பை இரத்து செய்யக் கோரியுள்ளார்.

எனவே UGD 146/230087-ன் இணைப்பை 2008-2009 முதல் இரத்து செய்யவும், அதன் நிலுவை கேட்புத் தொகை ரூ.6040/-ஐ நீக்கம் செய்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் வார்டு எண் 23, கதவு எண் 19, பெருமாள் கீழரதவீதி UGD இணைப்பு 146/230087-க்கான இடத்தை நேராய்வு செய்த உதவிப் பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி வார்டு எண் 23, கதவு எண் 19, பெருமாள் கீழரதவீதி UGD இணைப்பு 146/230087-னை 2008-2009 முதல் இரத்து செய்யவும் அதன் நிலுவை கேட்புத் தொகை ரூ.6040/-ஐ நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 164:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ8/1597/2020-பாளை)

---

11) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி டவுண் பாரதியார் பள்ளிக்கு அருகில் சிறுவர் விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணிக்கு ரூ.14.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 10 வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.9ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்14595/2018/IHSDP-3-5 நாள் 10.07.2020-ல் ரூ.14.97 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4162/2020/DO2 நாள் 01.09.2020-ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 02/2020-21/SCM -ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 26.08.2020ல் ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 15.10.2020 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் (1) M/s.Lotus Construction, Erode மற்றும் (2) M/s.Sree Balaji Associates, Erode ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 16.10.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 19.10.2020ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Lotus Construction, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sree Balaji Associates, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி டவுண் பாரதியார் பள்ளிக்கு அருகில் சிறுவர் விளையாட்டு அரங்கம் அமைத்தல் | ரூ.13,84,70,891/- | ரூ.15,10,39,518/- | ரூ.15,29,73,647/- |
| | | | 9.08% மதிப்பீட்டை விட அதிகம் | 10.47% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Lotus Construction, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,10,39,518/- ஆனது மதிப்பீட்டை விட 9.08% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 19.10.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 22.10.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 9.08% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.98% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Lotus Construction, Erode நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.14,53,62,993/- ஆனது மதிப்பீட்டை விட 4.98% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 22.10.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 27.10.2020-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான பொருட்கள், குறிப்பாக எரிபொருள்ப மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 27.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Lotus Construction, Erode நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,53,62,993/- ஆனது மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் திருநெல்வேலி டவுண் பாரதியார் பள்ளிக்கு அருகில் சிறுவர் விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 27.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Lotus Construction, Erode நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,53,62,993/- ஆனது மதிப்பீட்டை விட 4.98% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1497.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 165:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 2/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2020-21/SCM)

---

12) அரசாணை எண் 62, நிதித்துறை, நாள் 17.01.1994-இன்படி திருநெல்வேலி மாநகராட்சி உடன்நிகழ் தணிக்கைப் பிரிவில் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிறபடிகளின்படி செலவினத் தொகை 50% தணிக்கை கட்டணமாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சி உள்ளட்சி நிதித்தணிக்கை துறை, துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ப.வெ.எண் அ1/245/2020, நாள் 18.11.2020-ன்படி 2019-2020ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.30,28,655/-ஐ உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விபரப்படி 2019-2020ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.30,28,655/- மட்டும் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு 2019-2020ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.30,28,655/- மட்டும் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 166:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் பி6/5639/2020)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் பகுதியில் உள்ள வார்டு எண் 12, கக்கன் நகர் - 1 மையம், வார்டு எண் 13, வடக்குப்படை அங்கன்வாடி - 3 மையங்கள், முப்பிடாதி அம்மன் கோவில் தெரு - 1 மையம், வார்டு எண் 20, ஏ.ஆர்லைன் அங்கன்வாடி - 2 மையங்கள், பெரியார் நகர் -1 மையம், அண்ணா நகர் -1 மையம், வார்டு எண் 22, மனகாவலம்பிள்ளை சாலையில் 2 மையங்கள், காவல் கட்டுப்பாட்டு அறை அருகில் -1 மையம், பழைய காவலர் மருத்துவமனை சாலை -1 மையம், வார்டு எண் 23, பெருமாள் சன்னதி தெரு தொடக்கப்பள்ளி வளாகத்தில் -3 மையங்கள், வார்டு எண் 24, காவல் கண்காணிப்பாளர் அலுவலக மேல்நிலைத் தொட்டி அருகில் -2 மையங்கள், வார்டு எண் 25, ஜோதிபுரம் -1 மையம், ராஜேந்திர நகர்-1 மையம் அமைந்துள்ள பழைய அங்கன்வாடி கட்டிடங்களை அகற்றி அதில் புதிதாக 20 அங்கன்வாடி மையங்களை சீர்மிகு நகரத்

திட்டத்தின் கீழ் ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் பணி செய்ய 20.10.2020 அனறு வேலை ஆணை வழங்கப்பட்டு, பணி விரைவில் துவங்கப்படும் நிலையில் உள்ளது. மேற்படி அங்கன்வாடி மையங்களில் புதிய பணி மேற்கொள்வதற்கு ஏதுவாக ஏற்கனவே அப்பகுதியில் இருந்த பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டிலேயே உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி அங்கன்வாடி மையத்தின் பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திடவும் பழைய கட்டிடப் பொருட்களை பொது ஏலம் விடவும் மாமன்ற அனுமதிக்கும் முடிவுக்கும்

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி பாளை மண்டலம் பகுதியில் அமைந்துள்ள 20 அங்கன்வாடி மையங்களை சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளதாலும், ஏற்கனவே அப்பகுதியில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாலும், அதற்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி அங்கன்வாடி மையத்தின் பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திடவும், பழைய கட்டிட பொருட்களை மரகதவுகள், ஜன்னல்கள், இரும்பு கிரில் மற்றும் கூரை சம்பந்தப்பட்ட பொருட்களை பொது ஏலம் இடவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 167:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 2/2020-201-பாளை)

---

14) திருநெல்வேலி மாநகராட்சியில் NUHM திட்டத்தின் கீழ் Robust Medical Services என்ற நிறுவனத்தின் மூலம் புறஆதார அடிப்படையில் CPMU Staff 5 நபர்களும், 9 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் Paramdical staffs 21 நபர்களும் பணிபுரிந்து வருகின்றனர். 31.12.2018ம் தேதிய ஆணையாளர் அவர்களின் ஆணையின்படி Robust Medical Services Pvt. Ltd நிறுவனத்தாருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் 31.12.2019 உடன் முடிவடைந்துவிட்டது. 01.01.2020ம் தேதி முதல் இந்த ஆண்டிற்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2020ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த கொரோனா பாதிப்பு காரணமாக Robust Medical Services Pvt. Ltd-ல் இருந்து ஒப்பந்தம் புதுப்பிக்க வேண்டி அனுப்பப்பட்ட கடிதம் மாநகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை. கொரோனா தடுப்பு பணிகளில் மேற்படி நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்ட Paramdical staffs-ன் பணி சிறப்பாக இருந்த காரணத்தினால் அவர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். Robust Medical Services Pvt. Ltd நிறுவனத்தின் 14.10.2020ம் தேதிய கடிதத்தில் 01.01.2020 முதல் 31.12.2020 வரை ஒப்பந்தம் புதுப்பித்து தரகேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. Mission Director அவர்களின் சுற்றறிக்கையில் (.R.No.951/SHS/E/16, dated 11.09.2017) வரிசை எண் 7-ல் Based on the performance further contract period will be entertained after one day break (One working day) for contractual staff with due approval of E.C. after 11 months contract period எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 01.01.2020 முதல் 30.11.2020 வரை 11 மாத காலத்திற்கு அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து ஆணை வழங்கவும், Robust Medical Services Pvt. Ltd மூலம் பணிபுரிந்து வந்த பணியாளர்களுக்கு ஜனவரி 2020 முதல் செப்டம்பர் 2020 வரை 9 மாதம் ஊதியம் வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பு வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சியில் NUHM திட்டத்தின் கீழ் Robust Medical Services என்ற நிறுவனத்தின் மூலம் புறஆதார அடிப்படையில் CPMU Staff 5 நபர்களும், 9 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் Paramdical staffs 21 நபர்களும் பணிபுரிந்து வருகின்றனர். 31.12.2018ம் தேதிய ஆணையாளர் அவர்களின் ஆணையின்படி Robust Medical Services Pvt. Ltd நிறுவனத்தாருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் 31.12.2019 உடன் முடிவடைந்துவிட்டது. 01.01.2020ம் தேதி முதல் இந்த ஆண்டிற்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2020ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த கொரோனா பாதிப்பு காரணமாக Robust Medical Services Pvt. Ltd-ல் இருந்து ஒப்பந்தம் புதுப்பிக்க

வேண்டி அனுப்பப்பட்ட கடிதம் மாநகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை. கொரோனா தடுப்பு பணிகளில் மேற்படி நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்ட Paramdical staffs-ன் பணி சிறப்பாக இருந்த காரணத்தினால் அவர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். Robust Medical Services Pvt. Ltd நிறுவனத்தின் 14.10.2020ம் தேதிய கடிதத்தில் 01.01.2020 முதல் 31.12.2020 வரை ஒப்பந்தம் புதுப்பித்து தரகேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.Mission Director அவர்களின் சுற்றறிக்கையில் (.R.No.951/SHS/E/16, dated 11.09.2017) வரிசை எண் 7-ல் Based on the performance further contract period will be entertained after one day break (One working day) for contractual staff with due approval of E.C. after 11 months contract period எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 01.01.2020 முதல் 30.11.2020 வரை 11 மாத காலத்திற்கு அந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து ஆணை வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி Robust Medical Services Pvt. Ltd மூலம் பணிபுரிந்து வந்த பணியாளர்களை ஜனவரி 2020 முதல் செப்டம்பர் 2020 வரை 9 மாதம் பணியில் ஈடுபடுத்தியமைக்கும், ஊதியம் வழங்கப்பட்டமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்)

தீர்மானம் எண் 168:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் எச்4/6973/2013)

---

15) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 28-ல் அமைந்துள்ள பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர்.பேருந்து நிலைய வளாகத்தில் சீமிகு நகரம் திட்டத்தின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மற்றும் கூடுதலாக பேருந்து ஒதுக்கம் அமைக்கும் பணி ஆகிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக பேருந்து நிலைய வளாகத்தில் நடைமேடை எண் 1&2 மற்றும் 3&4 ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்களையும் பேருந்து நிலைய வளாகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடங்களையும் இடித்து அப்புறப்படுத்தவும், வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள திறவிடங்களை சுற்றி அமைக்கப்பட்டுள்ள M.S.Grill Compound ஆகியவற்றையும் அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடங்கள் மற்றும் M.S.Grill Compound ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்திடவும், அவ்வாறு இடித்து அப்புறப்படுத்தும் கழிப்பிடங்களிலிருந்து கிடைக்கும் PVC Door, M.S.Door & இரும்பு கழிவுகள் மற்றும் திறவிடத்தை சுற்றியுள்ள MS Grill ஆகியவற்றை எடை பார்த்து பொது ஏலம் விடவும் மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி வார்டு எண் 28-ல் அமைந்துள்ள பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர்பேருந்து நிலைய வளாகத்தில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மற்றும் கூடுதலாக பேருந்து ஒதுக்கம் அமைக்கும் பணி ஆகிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி பேருந்து நிலையதில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக பேருந்து நிலைய வளாகத்தில் நடைமேடை எண் 1&2 மற்றும் 3&4 ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்களையும் பேருந்து நிலைய வளாகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடங்களையும் இடித்து அப்புறப்படுத்தவும், வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள திறவிடங்களை சுற்றி அமைக்கப்பட்டுள்ள M.S.Grill Compound ஆகியவற்றையும் அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடங்கள் மற்றும் M.S.Grill Compound ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்திடவும், அவ்வாறு இடித்து அப்புறப்படுத்தும் கழிப்பிடங்களிலிருந்து கிடைக்கும் PVC Door, M.S.Door & இரும்பு கழிவுகள் மற்றும் திறவிடத்தை சுற்றியுள்ள MS Grill ஆகியவற்றை எடை பார்த்து பொது ஏலம் விடவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 169:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/7188/2020-மே.பா)

---